Phone No 4502
விலை அரை அணு
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.
MALAI MANI
(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)
மலர் 1] சென்னை (31—5—50) ❁ வெளியீயூர் (1—6—50) [இதழ் 266

தூய தமிழகத்தில் துரோகச் சிந்தனையைப் புகுத்தாதீர்

கம்பராமாயணம் கோழைத்தனத்தை வளர்க்கும்

(o)

கவிநயம்காட்டி இளைஞர் ஏறுகளைக் கெடுக்கவேண்டாம்

பழைமையைப் போற்றியது போதும்; இனியேனும் போற்றுதீர்

தமிழ்ப் பகைவர்களே ஆட்சிப்பீடத்திலிடுக்கின்றனர்

முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில் பாரதிதாசன் தலைமையுரை

முத்தமிழ் மாநாடு முத்தமிழ் வளர்ச்சிக்கு திட்டம் வகுத்தாகவேண்டும்; தமிழரின் பகைவர்கள் அரசியல் அதிகாரம் பெற்றவர்கள். நம் தமிழாச்சே என்று சென்னை சர்க்கார் பரிதாபப்பட்டாலும், சபலப்படாதே என்று மத்திய அரசாங்கம் என்னும் சுத்தி தலையில் அடிக்கிறது.

“மறைந்திருந்து வாலியை அடித்த ராமன் கதையை வருங்காலச் சந்ததியிடம் கூறாதே உருப்படாமல்போய்விடுவார்கள்” என்றுதான் நாங்கள் கூறுகிறோம். உயிர்த்தியாகம் செய்யவேண்டும் என்று கூறவேண்டும் இளைஞர்ஏறுகளிடம். கம்பராமாயணத்தைக் கோழை நூலை, துரோகச் சிந்தனையுள்ள நூலை எடுத்துக் கூறித் தலை இறக்கம் செய்துவைக்காதே என்றுதான் கூறுகிறோம் ‘விபீஷண ஆழ்வார்’ தன்னையும், நாட்டையும், அண்ணனையும் காட்டிக்கொடுத்தான். கருத்துக்கள் மட்டமானவை, கவிநயத்துக்காக இதை அவர்களிடம் சொல்லாதே. முன்பு சொன்னோம்; இனியாவது சொல்லாதே.” என்று முத்தமிழ் மாநாட்டில் ஆற்றிய தம் தலைமையுரையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கூறினார்.

“தோழர்களே! இந்த மாநாடு அடிப்படையில் கொள்கை இல்லாததுபோலவும் சமீபத்தில் நடந்த தமிழ்த் திருநாளுக்குப் போட்டியாக நடத்தப்படுவதென்று சிலர் சந்தேகிப்பதாகத் தோழர். ஈ. வி. கி. சம்பத் சொன்னார். மக்கள் பிரதிநிதிகள் நாம் திரளாகக் கூடியுள்ளோம் முத்தமிழ் மாநாடு கூட்ட. யாரோ இரண்டுபேர் கூட்டிய மாநாட்டுக்கு இதைப் போட்டியாக கூறுவது தகுமா, நியாயமா? உயர்ந்த நோக்கத்தோடு ஆரம்பித்திருக்கிறோம், இம்மாநாட்டை; நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினராக இருக்கலாம். மற்றவர்கள் கவலைப்படவில்லை, நாங்கள்தான் கூட்டவேண்டி இருக்கிறது. மற்றவர்களுக்கு என்ன கவலை, தமிழ்த் திருநாள் மக்களின் கூட்டமல்ல; அது தனிப்பட்டோரின் ஏற்பாடு. அப்படி அவர்கள் கூட்டிய மாநாட்டுக்கும் நமக்கும்கூட அதிகமுரண்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. “தமிழ் அழிந்துவிடுமென்று ஒரு கூட்டத்தினர் அன்று கூறினர், அது சரியாகப் போய்விட்டது என்று தோழர், ஆர். கெ. ஷண்முகம் அன்று கூறினாராம். யார் அந்த கூட்டம்; ஏன் பெயர் சொல்லவில்லை; இந்தியால் தமிழ் கெடுமென்று நாங்கள் கூறியதையொட்டித்தானே அவர் பேச்சு இருக்கிறது. போட்டி மாநாடு எப்படியாகும்? அவினாசியார்கூட ஒத்துப்போகும்படித்தான் பேசியுள்ளார். அவர் பேச்சைப் படித்தேன்; ஆனால் நான் எதிர்பார்த்தது வேறு; பதவியிலிருந்தபோது பெருந்தீங்கு செய்ய முனைந்தார். குறளிலிருந்து காமத்துப்பாலை எடுத்துவிடு என்று கல்வி மந்திரியாக இருந்தபோது கூறினார் ‘அந்தப்பால் அவருக்கும் பிடிக்கவில்லை! அதைக் குடிக்கத் தெரியாது போலும்! காமத்துப்பாலை நீக்கிவிட வேண்டுமென்று கூறியதிற்குத் தமிழ்த் திருநாள் மாநாட்டில் மன்னிப்புக் கோருவார்என்றுநினைத்தேன். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை.

தமிழ்ப் புலவர்கள் மக்களுக்கு ஒருவித நன்மையும் செய்யவில்லை; அவர்கள் அவினாசியாருக்குப்புத்தி கூறினாரா என்றால் அதுவுமில்லை; அவர்களைப் நாவலர் பாரதியார் திட்டுவது சரிதான்.

தமிழின் பண்பாடு

முத்தமிழ் பற்றிப் பாரதியார் பேசும்போது மூன்று இங்லீஷ், மூன்று பிரெஞ்சு; மூன்று இத்தாலீ என்று கூறுவதில்லை, ஆனால் முத்தமிழ் என்று கூறுகிறோம் என்று கூறினார். ஆங்கிலத்தில் நாடகம் கேட்டால் ஒரு வண்டி நீரையக் கொண்டுவந்து தள்ளி விடுவார்கள். தமிழில் கொண்டுவா என்றால் அண்ணாதுரை

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

தகரம் தருகிறேன்; தங்கத்தை கொடு!

பிரிட்டனின் கோரிக்கையும் தெ. ஆப்பிரிக்காவின் கோபமும்

லண்டன், மே. 30

தென்னாப்பிரிக்காவுக்கு வேண்டிய தகரத்தை முழுவதுமே பிரிட்டனிலிருந்து தான் கிடைக்கிறது. இதற்கு பணம் தங்கத்திலேயேகொடுக்கப்படவேண்டும் என்று பிரிட்டன் வற்புறுத்துகிறது. இதை தென்னாப்பிரிக்கா குறைகூறி முணுமுணுக்கிறது.

உலக மார்க்கெட்டில் டாலர் கொடுத்து வாங்கும் பொருள்களுக்கு தங்கத்தில் தான் பணம் செலுத்தவேண்டும் என்பது எற்பாடு என்று பிரிட்டிஷ் வட்டாரங்கள்கூறுகின்றன. —குளோப்

முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டிற்கு உடுமலை நாராயணக் கவி அவர்களால் இயற்றப்பட்டு நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களால் இசையோடு பாடப்பெற்ற

முத்தமிழ் வாழ்த்து

தலை.

முத்தமிழ் மாநாடு வாழ்க
முதுரையால் பொது நீதியைப் பாடும் (முத்)

இடை.

புத்தியில் மேம்படும் புலவர் கொண்டாடும்
புத்தக வடிவினில் புதுமையை நாடும் (முத்)

தொங்கல்.

பகுத்தறிவுக் கொவ்வாத பஞ்சாங்கப் பாடைதனைப்
பார்ப்பனர்கள் சரிப தி பாய்த்துவிட்டார்
மகமதியர் மத்தியிலே மண்ணாசி புரியவந்து
மறுபாதி தனிலுருதை வழங்கவிட்டார்
பகைத்துவைத்துப் பாராண்ட டரங்கியர்கள்
ஆங்கிலத்தை
பதவிபெறும் படிப்பாகப் பரவ விட்டார்
மிதந்துநின்ற தென்மொழியின் வேரறுக்க இந்தியது
விருப்பமென்றூர் கட்டாய வினாவு காணீர்.

கழல்.

வந்ததும் போனதும் வாழ்வது தேடும்
சந்தையுமானது தமிழ் நாடு
சிந்தையி லுவிதைத் தெளிந்து மேம்பாடு
செய்திடக்கோவையில் தினமொன்று கூடும் (முத்)

தொங்கல்.

கந்தன் வள்ளி கல்யாணக் காதல் பாட்டு
கண்ணன் பலகன்னியரைக் கலந்த பாட்டு
அந்திவண்ணன் சுடுகாட்டி லாடும் பாட்டு
அருத்தமற்ற சாமிகளுக் கனந்தம்பாட்டு
முந்தினவர் பாட்டிலுள்ள மொழியை மாற்றி
முன்னேற்றத் தடையான மூடர்பாட்டால்
செந்தமிழும் தென்னாடும் சிதைந்திடாமல்
சீர்திருத்தப் பாக்கள்பல திராழ நன்றே.

கழல்.

மழையொடுபூமி உழவையும் தெய்வ
மாண்பினும் மேலாய் மதிதோனும்
அழகொடு வள்ளுவன் அறநெறியோர்க்க
அறிவளராலே வழிகாணும் இந்த (முத்)

ஐக்கிய நாட்டு பாதுகாப்பு கௌன்ஸில் லண்டனில் கூடும் ?

லண்டன், மே 30—

ஐ. நா. காரியதரிசி ஜெனரல் டிரிக்வேலியின் சமாதான திட்டத்தின் முதல் அம்சமாக ஐ. நா. பாதுகாப்புக் கௌன்சில் கூட்டம் சீக்கிரமே லண்டனில் நடைபெறலாம் என்று கூறப்படுகிறது.

இந்த கூட்டத்தில் ரஷ்யாவும் சேரலாம் என்று கூறப்படுகிறது.

இப்பொழுது மிகவும் சிக்கலான விஷயம் ஐ. நா. வில் சீனப் பிரதிநிதித்துவம் பற்றியதுதான் என்றும் இது விஷயமாக பிரிட்டன் கொள்கையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

சீன கம்யூனிஸ்டுகளை ஐ. நா. விற்குள் கொண்டுவர எதையும் செய்வதில்லை என்று பிரிட்டன் யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரான்ஸ் மூன்றும் ஒப்புக்கொண்டிருப்பதாக வாஷிங்டன் செய்தி ஒன்று கூறுகிறது.

மாஸ்கோ, பாரிஸ், லண்டன் ஆகிய இடங்களில் முக்கிய சம்பாஷணைகளை நடத்தியதின் விளைவாக டிரிக்வேலியிடம் புது திட்டம் ஏதாவது இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சென்னைபூங்கா (பார்க்கு) ஸ்டேஷனிலிருந்து வெளியேற கிளை வழி

சென்னை, மே 30—

சென்னை பார்க் ஸ்டேஷனில் இறங்கி வெளியே செல்கின்றவர்களுக்கு பிரத்யேகமாக ஒரு வழி பிரதான பாலத்திலிருந்து கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

தென்னிந்திய எலெக்ட்ரிக் டிரெயினின் சர்வீஸ் ஸ்டேஷன்களில் “பார்க்” ஸ்டேஷனில் தான் பிரயாணிகள் போக்குவரத்து அதிகமாய் இருப்பதாகவும் சராசரி ஒரு நாள் சுமார், 10,000 பேர்கள்போய் வருவதாகவும் கூறப்படுகிறது.

வயது இரண்டு எடை 84-பவுண்டு!

டோகியோ, மே 30—

அகிடா என்ற ஜப்பானிய ஊரில் ஒரு குழந்தை நன்றாக வளர்க்கப்பட்டு வருகிறதாம். குழந்தைக் இரண்டு வயது ஆன போதி மூன்று அடி மூன்று அங் உயரமும், 83 பவுண்டு நிறை இ சதாகவும் கூறப்படுகிறது.

வருங்காலத்தில் நன்றாய் குஸ்தி பயில்வானாவதற்கு இக்குழந்தைக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடுசெய்துள்ளதாக தெரிய வருகிறது.

—ஏரோப்

மாலை மணி

சென்னை 31—5—50 புதன்கிழமை

நாட்டைச் சிதைக்கும் நாட்டம்

ஒரு நாட்டைச் சிதைக்க, நாட்டு மக்களை அடிமைப் படுத்தி வைக்க, அந்நாட்டின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் அழிப்பதே ஆக்ரமிப்பாளர் கைக்கொள்ளும் முறை. அதற்கு முதற் பணியாக, அந்நாட்டின் மொழியைக் குலைத்து விடுதல் வேண்டும். இம்முறை தான் தொன்றுதொட்டு, ஆக்ரமிப்பாளர் தாங்கள் ஆக்ரமிக்க நாடும் நாட்டில் கையாண்டு வரும் முறையாகும். இதற்கு வரலாறு பல சான்றுகளைப் பகர்ந்து கொண்டிருப்பதைப் படித்தோர் யாவரும் நன்கறிவர்.

தமிழ்நாட்டிலே, தமிழர் இழிந்த நிலை எய்தக் காரணமாயிருந்ததும் ஆகரமிப்பாளர் கையாண்ட மேற்படி முறையே தான். 2000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ்நாடு—வட இந்தியாவையும், கடாரத்தையும், சிங்களத்தையும் ஆண்ட தமிழ்நாடு—இமயத்தில் இலச்சினை பொறித்துச் சிறந்த தமிழ் நாடு—தமிழரை இழித்துரைத்த கசடர் தலைமீது கல்சுமக்கச் செய்த தமிழ்நாடு, பிற்காலத்தில் மலையாள நாடு, தெலுங்கு நாடு கன்னடநாடு, துளுநாடு என்றெல்லாம் பல சின்னஞ் சிறு நாடுகளாகப் பிரிந்து, பிற நாடுகளுக்கு அடிமையானதற்குக் காரணமும், தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் மறந்து கேவலம் அடிமைகளாய் வாழ நேர்ந்தமைக்குக் காரணமும், தமிழ் மொழியை ஆகரமிப்பாளர் சிதைக்க இடங்கொடுத்து விட்டதேயாகும்.

தொல்காப்பியத் தமிழ், திருக்குறள் தமிழ் இன்று தமிழ் மக்களால் புரிந்துகொள்ளப்பட முடியாத மொழியாகுமாறு செய்யப்பட்ட சூழ்ச்சி தான், தொல்காப்பியக் காலத் தமிழ் மக்களுடைய பண்பாடு, கலை, நாகரிகம், உயர்வாழ்வு, வீரம் அனைத்தும் குலைந்து, இன்று தமிழர் அடிமைத்தனத்திற்குள் சிக்கி வாழுமாறு செய்து விட்டது.

இன்றும்—தமிழ்நாடு மிகச் சிறிய எல்லைக்குள் குறுகி, தமிழ்மொழி தன் பழைய பண்பாட்டை இழந்து நிற்கும் இன்றும்—அந்தப் பழைய சூழ்ச்சியே கையாளப்படுகிறது; தமிழ் மொழியைத் தலை எடுக்க ஒட்டாமல் குன்ற வைக்கும் முயற்சி கைக்கொள்ளப்படுகிறது தமிழன் என்றைக்கும் தேனும் ஒரு பிறநாட்டானுக்கு டிமையாகிக் கிடக்குமாறு ய முயற்சி செய்யப்படு து.

மிழ்நாட்டில் தமிழ்மொழி தன் மொழியாக விளங்க வேண்டும் என்று தமிழர் கூறுவது மறுக்க முடியாத நியாயம். தமிழ்நாட்டில் வாழும் பிறரும் தமிழைக் கட்டாய பாடமாகக் கற்றுப் பிறகே தங்கள் தாய்மொழியைக்கற்பதும் பிற மொழிகளைப் பயிலுவதும் முறையாகும். மேலும் தமிழ் நாட்டில்எல்லாம் பாடங்களும், பிற மொழிகள் தவிர தமிழிலேயே கற்பிக்கப்பட வேண்டும். நம் நாடு குடியரசு நாடு ஆகிவிட்ட பிறகு, தமிழ்மொழி முதல் மொழியாக ஆக வேண்டும் என்று கேட்பதற்கு முன், ஆளவந்தவர்கள் அதைச் செய்பதுவிட்டிருக்க வேண்டும்.

ஆனால் நம் நாட்டில், தமிழர்களால் வன்மையாக எதிர்க்கப்பட்டு வரும் இந்தி மொழியை முதல் மொழியாக்க முயற்சிக்கப்பட்டு வருகிறது. மத்திய ஆட்சியாளர் இந்தியைக் கட்டாயமாகத் தமிழ்நாட்டின் மீது திணிக்க முனைந்திருக்கின்றனர். லண்டனிலுள்ள இந்திய மாணவர் மன்றத்திற்கு அண்மையில் பண்டிட் நேரு விடுத்துள்ள செய்தி ஒன்றில், “இந்தியாவின் தேசிய மொழியாகிய இந்தி நம்முடைய (இந்திய) பல்கலைக் கழகங்களில் விரைவில் போதனை மொழியாகி விடும் என்பதில் ஐயமில்லை” என்று குறித்துள்ளதொன்றே அவரது மனப்பான்மையை, தமிழ் நாட்டைப்பற்றி அவர் கொண்டுள்ள உள்ளக் கிடக்கையை நன்கு எடுத்துக் காட்டவல்லதாயிருக்கிறது.

எங்ஙனமேனும் இந்தி மொழியைப் போதனைமொழியாகவும் பொதுமொழியாகவும் ஆக்கிவிட்டால், ஆங்கிலம் பொதுமொழியாக இருந்த காலத்தில் அடைந்த கதியையே தமிழ் இப்போதும் அடையும். இந்த வகையில் தமிழைக் குன்றவைத்து விட்டால், தமிழர் தங்கள் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறியாதவர்களாய் நல்ல அடிமைகளாய் வாயில்லாப்பிராணிகளைப்போன்று வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பதே மத்திய ஆட்சியாளரின் முடிவாக இருக்கிறதென்பது தெளிவாக விளங்குகிறது.

மத்திய ஆட்சியாளரின் போக்கு, தமிழர்களை அடிமைப் படுத்தும் முயற்சியாக இருக்கிறதென்றால், சென்னை மாகாண ஆட்சிப்பீடத்தை அலங்கரிக்கும் தமிழ் மந்திரிகளும், இப்பேராபத்தான நிலைமைச் சற்றும் உணராதவர்களாய் தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடுவதை விட்டு, இந்தியைக் கட்டாயபாடமாக ஆக்கி, தமிழ் பயிலும் நேரத்தைக் குறைத்து, தமிழ் இலக்கண இலக்கியங்களில் அறிவு வளராதிருக்கும் முறையைப் புகுத்தி, தமிழைப் படிக்காமலே கல்வி பயில்வதற்குரிய வாறு வசதிகள்செய்து தமிழை இழித்துவைக்கும் முறையில் அரசாங்கச் சட்டங்களை பிறப்பித்துள்ளார்கள். கல்வி இலாகா மந்திரிப் பதவியை ஒரு மலையாளநாட்டவர் வகிப்பதால், வடமொழியாகியசமஸ்கிருதம் ஒன்றைத் தவிர, வேறு மொழி உலகில் இருப்பதாகவே எண்ணமற்ற அவர், போகுமிடமெல்லாம் சமஸ்கிருதத்தைப் பொது மொழியாக்க வேண்டும், முதல் மொழியாக்க வேண்டும் என்றெல்லாம் கூறிக்கொண்டு இருக்கிறார். சமஸ்கிருதம் பேச்சு வழக்கற்றுச் செத்த மொழி என்பது உலக அறிஞர்கள் ஒப்புக்கொண்டுள்ள உண்மை. அங்ஙனமிருந்தும், அதிகார பீடத்தை வகிக்கும் ஒருவரே அவ்வழக்கிறந்தவடமொழியை வற்புறுத்துவதால், மூலைமுடுக்கிலுள்ள சனதனங்களும் வர்ணாச்சிரமங்களும் அதை வற்புறுத்த முனைந்துவிட்டன.

இந்நிலையில், செத்த சமஸ்கிருதம் ஒருபுறம், பொது மொழியாகத்தக்க வளமில்லா இந்தி ஒருபுறம் மத்திய ஆட்சியாளரின் முரட்டுப் போக்கு ஒருபுறமாக, தமிழ்நாட்டைக் குலைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன.

தமிழர்கள் இந்நிலை கண்டு வாளாயிருத்தல், தங்கள் வாழ்வுக்கு வீழ்ச்சி தேடிக்கொள்வதாகவே ஆகும். தமிழ்நாட்டில் தமிழ்கட்டாய பாடமாக, முதல் மொழியாக, அரசாங்க மொழியாக, தமிழ்நாட்டின் பொது மொழியாக, போதனை மொழியாக ஆக வேண்டும். பிற மொழிகள் அனைத்தும் விருப்பபாடமாக ஆக்கப்பட வேண்டும் இந்நியதியைமாற்ற தமிழர்சிறிதும் ஒப்புதல்கூடாது. தமிழைக் குலைக்கவரும் முயற்சி எதுவாயினும் அதனை எதிர்த்துப் போரிடத் தமிழர்கள் ஆயத்தமாயுள்ளனர் என்பதைத் தமிழ்நாட்டு ஆட்சி பீடமும், மத்திய ஆட்சிபீடமும் உணருமாக; தமிழ் மொழியைக் குலைக்கும் முயற்சியை எள்ளளவும் தமிழர்கள் விட்டுக்கொடுக்கமாட்டார்கள் என்பதை ஆளவந்தவர்கள் அறிவார்களாக.

நியூகினியில் அலுமினியம்

ஸிட்னி, மே 30—

நியூகினியில் அலுமினியம் ஏராளமாக அகப்படுகிறதென்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு பிரிட்டிஷ் கம்பெனியும் ஆஸ்திரேலிய சர்க்காரும் சேர்ந்து ஈடுபடுவர் என்றும், இங்கு கிடைக்கும் அலுமினியம் காமன்வெல்த் நாடுகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் என்றும் இதனால் டாலர் மிச்சப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

ஆசிய நாடுகளுக்கு உதவியளிக்க மேலும் யோசனை

லண்டன், மே 30—

ஆசிய நாடுகளுக்கு உதவி பற்றி மேலும் ஆலோசித்து நடவடிக்கைகள் எடுக்க காமன்வெல்த் பிரதிநிதிகள் மாநாடு செப்டம்பரில் லண்டனில் கூடவிருக்கிறது.

காமன்வெல்த்திலுள்ள ஆசிய நாடுகள் பொருளாதார உதவியே முக்கியமானதென்று வற்புறுத்தி வருகின்றனர். —[illegible]

தூய தமிழகத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதிய இரண்டு மூன்று நாடகங்கள் தான் கிடைக்கும். தமிழன் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் கண்டுபிடித்தது, மற்ற நாட்டினர் இதுவரை கண்டறியாதது. முத்தமிழ் என்பது மூன்று வகையான தமிழ் அல்ல. ஒவ்வொரு சொல்லிலும் மூன்று தமிழ் உள்ளன “வா” என்ற தமிழ் மொழியில் முத்தமிழும் உள்ளது. உச்சரிப்பையொட்டித் [illegible] பகுதியைக்கொண்டதென்று கூறுவது. இந்தப் பண்பாடு தமிழுக்கு மட்டும் தான்.

வடவரின் பைத்தியக்காரத்தனம்

தமிழ் என்பதின் பொருளே மிகப் பழையது. சமஸ்கிருதம் என்றால் இடையில் ஒழுங்கு செய்யப்பட்டதென்பது பொருள். தமிழ் ஆற்றல் என்பதில் தமிழ் என்பது தமிழர் டைக்கும், வீரத்துக்கும் மன்னருக்கும் மக்களுக்கும் பொருந்தும். தமிழ்கொமேல் நாம் கெட்டொழிந்தோம் என்று பாரதியார் கூறியதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்; முத்தமிழ் மாநாடு முத்தமிழ் வளர்ச்சிக்கு திட்டம் வகுத்தாக வேண்டும்; வேலி பயிரை மேயும் தமிழரின் பகைவர்கள் அரசியல் அதிகாரம் பெற்றவர்கள், நம் தமிழர்களே என்று சென்னை சர்க்கார்பரிதாபப்பட்டாலும், சபலப்படாதே என்று மத்திய அரசாங்கம் என்னும் சுத்தி தலையில் அடிக்கிறது. மாகாணப்பித்து உதவாது, தமிழ் படிக்கவேண்டுமென்று கூறுவது பயித்தியம், இந்தியைப் படி என்று கூறுகிறார்கள் இந்தி படி என்று பட்டேல் கூறும்போது 500 திராவிட முன்னேற்றக் கழகங்கள்தான் இருந்தன. ஆனால் பட்டேல் கூறிய இரண்டு நாட்களுக்கெல்லாம் 600 ஆகக் கிளைத்து விட்டது. இவ்வாறு பயித்தியக்காரத்தனமாகப் பேசி மக்களை இப்படி இழந்துவிடுவார்களா?

நாம் இப்பொழுது புலவர்களையெல்லாம் திரட்டி இலக்கியமன்றம் அமைக்கப்போகிறோம். எந்தவிதமான நாடகங்கள் எழுதவேண்டுமென்று முடிவுசெய்ய விளக்கம் தர மன்றம் உழைக்கும்.

இலக்கணமும் இலக்கியமும்

“ஓதலும் தூதுசெல்வதும் உயர்ந்தோர்மாட்டு” என்று கூறுவதில உயர்ந்தோர் ஐயர் என்றுதான் நச்சினார்க்கினியர் கூறுகிறார். நம்முடைய இலக்கியமே ஆரியத்தைச் சார்ந்ததென்று பொருள்படும்படி செய்யப்பட்டுள்ள உரை நூல்களையெல்லாம் பொய்ப்பித்துக் கூறுகிறார் சோமசுந்தர பாரதியார். அவர் செத்தால் தான் அவர் கூறுவது சரி என்று தமிழன் ஒத்துக்கொள்வான். அப்பொழுதுதான் அவருக்கு ஞாபகச்சின்னம், கல்லால் கட்டு மண்ணால் கட்டு என்று கூறுவர். சோமசுந்தர பாரதியார் ஒருவர் தான் தமிழராகத் தொல்காப்பியத்தைக் கண்டவர். தக்க மேற்கோள்களுடன் எந்தப் புலவனும் மறுக்க முடியாத நிலையில தொல்காப்பியத்துக்கு உரை எழுதியுள்ளார் சோமசுந்தரபாரதியார் உரை தூய்மை செய்யப்பட வேண்டும். இப்பொழுது நாம் உத்தேசித்திருக்கிறபடி ‘இலக்கிய மாமன்றம்’ ஏற்படுத்த வேண்டும், இலக்கியம் என்பது வடமொழிச் சொல் என்பது நாவலர் கருத்து.. இலக்கியம், இலக்கணம் தமிழ் மொழியல்லவென்று கூறினால் நானும் அவ்வாறுதான் கூற ஆசைப்படுகிறேன் அதனால்இலக்கிய மாமன்றம் என்பதற்குப் பதில் செய்யுள் மன்றம் என்று வைத்துக் கொள்ளலாம்

“திராவிடம் என்ற சொல்லுக்குப் பொருள், வளர்த்த எல்லைக் கோட்டையுடையது என்றாலும் ஆனால் இரண்டு நாட்களுக்குமுன் ஆர்.கே.எஸ். கூறுகிறார் திராவிடம் புராணத்தில் இல்லை, அதனால் எனக்குப் பிடிக்கவில்லையென்று. அவர் கூறுவது தவறு: புராணத்திலும் இதிகாசத்திலும் வால்மீகராமாயணத்திலும் “திராவிடம்” என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. தாயுமானவர்கூட ஒரு பாடலில்கூறியுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு கூட்டப்பட்டதே தமிழ்த்திருநாள் அவர்களுக்குத்தமிழிலே தெரியாது.

இனி சொல்லாதே

“மறைந்திருந்து வாலியை அடித்தராமன் கதையை வருங்காலச் சந்ததியிடம் கூறாதே உருப்படாமல் போய் விடுவார்கள்” என்றுதான் நாங்கள் கூறுகிறோம் உயிர்த்திலக்கம் செய்யவேண்டும் என்று கூறவேண்டும் இளைஞர் ஏறுகளிடம். கம்பராமாயணத்தைக் கோளமூநூலை, துரோகச்சிந்தனையுள்ள நூலை எடுத்துக் கூறித் தலை இறக்கம் செய்து வைக்காதே என்றுதான் கூறுகிறோம் ‘விபீஷண ஆழ்வார்’ தலைவனையும் நாட்டையும் அண்ணனையும் காட்டிக்கொடுத்தான். கருத்துக்கள் மட்டமானவை, கவிநயத்துக்காக இதை அவர்களிடம் சொல்லாதே, முன்பு சொன்னோம்; இனி சொல்லாதே பெரியபுராணத்தின் பெருமையைப் பற்றிக்கூறாதே குழந்தைஅறுத்து உண்டு சமைக்கும்படி கேட்கும் பண்டாரப்பயல்கள் கதைகள் இக்காலத்துக்கு வேண்டாம். இது தெரியாமல் எங்கள் மீது பழி சுமத்த ‘ராமாயணத்தை எரிக்கச் சொல்லுகிறார்கள்’’ என்று கூறிப்பழி தூற்றுகிறார்கள்.

டி. கே. சி. கூறுகிறார், மொத்தம் கம்பராமாயணத்தில் உள்ள பாடல்களில் 300 தான் கம்பன் இயற்றியவையென்று; ஏன் அவரை ஒன்றும் செய்யவில்லை? சர்க்காருக்கு அவரைக்கண்டால் பயமா?” என்று கூறி மற்றவை பின் உரையில் கூறுவதாகக் கூறினார்.

கி. மு. 1000 ஆண்டு கல்லறைகள்

அம்மான், மே 30—

ஜெருசலத்திற்கருகில் அல்ஜீப் என்ற கிராமத்தில் கி. மு. 1000 ஆண்டில் கட்டப்பட்ட கல்லறைகள். இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

பொல்லாத இந்தித் தீ பரவும் வேளையில் புலவர்களிடையே போராட்டமா?

அரசியல் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டதே 'திராவிடம்' என்ற சொல்

திராவிடப்பெரும்படையே தீந்தமிழைக் காக்கவல்லது

தமிழ் காக்கும் வீரர்கள் இல்லாவிடில் தமிழ் வளர்ப்பவர் பணி பயனற்ற பணியாகும்

முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில் தலைவர்கள் முழக்கம்

கோவை, மே. 28— இன்று முத்தமிழ் மாநாடு காலையில் 9 மணிக்குத் தொடர்ந்து ஆரம்பமாயிற்று. கூட்டம் நேற்றைவிட அதிகமாகி மாநாட்டுப் பந்தலில் இட நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

நேற்று பிற்பகல் தோழர்கள் கா. அப்பாதுரை இராம மீனு சிசுந்திரம், என். வி. நடராஜன், எ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள்

மாலையில் சிதம்பரம் ஜெயராமன் அவர்கள் இன்னிசை விருந்தளித்தார் பின்பு கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் திராவிடநாட்டு வாழ்த்துப்பா பாடியபின், "திருவள்ளுவர் வரலாறு" பற்றிய வில்லுப்பாட்டு நடத்தி மக்களை மகிழ்வித்தார்.

இரவு தோழர். கெ. ஆர். ராமசாமி, சி என். ஏ. குழுவினர் ஆகியவர்களால் "சந்திரமோகன்" நாடகம் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

இன்று காலையில் தோழர் சி. பி. சிற்றரசைப் பேசும்படி மாநாட்டுத் தலைவர் கவிஞர் அழைத்தார்.

சி. பி சிற்றரசு

தோழர் சி.பி.சிற்றரசு பேசுகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் செயலில் தமிழ் வளர்ப்பவர்கள் என்று கூறினர், "முத்தமிழ் வளர வேண்டுமென்று தி. மு. க அக்கறை காட்டுவதற்கு ஒரு சிறந்த காரணம் 1938-39ல் இந்தி எதிர்ப்பு நடத்தியதாகும். திராவிடம் என்ற வார்த்தை பிடிக்கவில்லையென்று கூறு தோழர் ஆர். கே. எஸ் அவர்களுக்கு நான் அனுதாபம் தெரிவிப்பதா வேண்டாமா என்று தெரியவில்லை. அமெரிக்கா சென்றிருந்தபோது தோழர் ஷண்முகம் பேசும் தமிழ்நாட்டு இட்டிலி சாம்பார் தான் விலை மதிப்புள்ள அமெரிக்க சிற்றுண்டிகளைவிட அதிகம் பிடிக்கிறதென்று கூறினர். அவ்வாறு தமிழ் உணவையும் தமிழ் பண்பையும் பேசிவந்த ஒரு தமிழர் இன்று இப்படிக் கூறும் போக்கு வியப்பைத் தருகிறது.

"யாருக்கு எது புரியவில்லையோ அவர்களைப் பிடித்து அதே வேலைக்கு மந்திரியாக வைத்தால் நமக்கு என்ன பயன் கிடைக்கும்? கல்வி மந்திரியார் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பள்ளிக்குப் பேச அழைத்தபோது அங்கே வந்து மேடைத்தளத்தில் பேசினார் கேட்டபோது அவருக்கு வட ஆற்காடு மாவட்டம் தமிழ்நாடு என்றுதெரியாதென்று கூறுகிறார். அடுத்தபடி தனக்குத் தமிழ் தெரியாதென்று கூறுகிறார். அப்படிப்பட்டவர் நமக்குக் கல்வி மந்திரியாக இருந்தால் தமிழ் ஆக்கம் பெறுமா?

தமிழ் இளைஞர்களே தமிழ்நாட்டின் பண்பு [illegible] பாதுகாக்க முன் வாருங்கள்; ஆவன செய்யுங்கள்.

சர்க்கார் தான் மந்திரிசபை என்று மந்திரிகள் நினைத்துக் கொண்டார்கள். சர்க்கார் முகலாய சாம்ராஜ்யம் அழிந்த பின்பு, வெள்ளையர் வெளியேறிய பின்பும் ஓமந்தூரார் மந்திரிசபை அழிந்த பின்பும் இருந்தது சர்க்கார். இப்பொழுதுள்ள குமாரசாமிராஜா சர்க்கார் ஒழிந்த பின்பும் இருக்கும் சர்க்கார். சர்க்கார் ஒரு நீர்த்தேக்கம் அதை உபயோகித்து நாட்டைப் பண்படுத்தும் பண்ணையாள் மந்திரி; சர்க்கார் ஒரு இயந்திரம் அதை இயக்குபவன் தான் மந்திரி; இதை மறந்து ஏகாதிபத்ய ஆட்சி நடத்துகின்றனர் காங்கிரஸ் மந்திரிகள்.

சுதந்திர நாட்டில் அன்னியன் எள்ளிநகையாடுவானே என்றுதான் நாங்கள் நாட்டில் கிளர்ச்சி செய்யவில்லை; ஆக்க வேலை செய்து நாட்டை நிர்மாணிக்கவே நாங்கள் ஆவன செய்து வருகிறோம்" என்று கூறி முடித்தார்.

டி. கே சீனுவாசன்

தோழர் டி. கே. சீனிவாசன் கூறியதாவது: "சர்க்கார் தமிழைப் பற்றிக் கவலைப்படும் பண்பட்ட தேர்ச்சியுள்ள சர்க்கார் அல்ல; பிரதமர் குமாரசாமிராஜா தமிழ் திருநாளில் சர்க்கார் தமிழுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கூறினால் இது என்ன முதல் மந்திரியே இவ்வாறு பேசுகிறாரே என்ற குழப்பநிலைதான் தோன்றும்; நேற்று தமிழை வளர்ப்பவர்கள் பேசினார்கள்; இன்று தமிழைக் காக்கிறவர்கள் பேசப்போகிறோம்; தமிழைக் காப்பவர் இல்லாவிட்டால் தமிழ் வளர்க்கிற புலவர்கள் வேலை இல்லாதுபோகும்; இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தி, ஆயிரமாயிரம் தொண்டர்களைச் சிறைக்கூடம் அனுப்பி, தால, முத்து நடராஜன் உயிர்களைப் பணயம் வைத்துத் தமிழைப் பாதுகாத்திருக்கிறோம்; கம்பனைப்போல் பெண்களின் அங்கங்களை வர்ணிப்பவர் பாரதிதாசன் அல்ல; ஒரு வார்த்தையில் அவ்வளவு பொருளையும் திரட்டிக் கொடுத்துவிடுவார்; பாரதிதாசன் கால்தூசிக்குக் கூடக் கம்பன் ஒப்பாகான் என்று கூறுகிறேன்.

போர்க்களம் சென்ற மகன் புறமுதுகிட்டு ஓடிவந்தால் அவன் பாலருந்திய மார்பை அறுத்தெறிவேன் என்று கூறிய தமிழ் வீரமகளுக்குத் தமிழ்நாட்டில் ஞாபகச்சின்னம் இல்லை; அதனால்தான் காமராஜர்கள் மக்களை காற்றடிக்கும் பக்கத்திருப்புகிறார்கள் இந்நிலையை மாற்றியமைக்க தமிழ்நாட்டு வீரர் கூட்டம் திரண்டெழுந்து ஆக்கவேலை செய்யவேண்டும்.

ஏ. கே. வேலன்

தோழர் ஏ. கே. வேலன் நாடகம் என்பது பற்றிப் பேசியதாவது:— "பாட்டுக்கு இசை எப்படி அவசியமோ நடிப்புக்கு உணர்ச்சியினை வெளிப்படுத்த நாடகம் தேவை. செய்து காட்டினால் தான் மக்கள் மனதில் எளிதில் படியும்.

கண்ணகியின் வரலாறு போன்ற வீரச்சுவை ததும்பிய வரலாறுகளெல்லாம் நாடக மூலம்தான் மக்கள் உள்ளத்தில் பதியவைக்கப்பட்டன. நாடகத்தமிழுக்கு இலக்கியம், வரலாறு இல்லாமல்போய்விட்டது. கருத்தை அடிப்படையாகக் கொண்ட நாடகத்தை நடிப்புத்திறன் பெற்றவர்கள் நடித்துக்காட்ட வேண்டும் இப்பொழுது மக்களுக்குத் தேவையான நாடகங்களே அதிக மதிக்கப்படுகின்றன" வென்று கூறினர்

வெள்ளைவாரணனர்

தோழர் வெள்ளைவாரணனர் பேசியதாவது: "தமிழர் என்றநிலையில் இங்கு கூடியுள்ளோம்; மொழிவேறு அவன் வேறு என்று பிரித்து முடியாத காரியமென்று நாவலர் பாரதியார் கூறினர்; தமிழையே நம் முன்னோர்கள் கும்பிடும் தெய்வம் ஆகக் கொண்டார்கள். எண்ணுதல், சொல்லுதல், செய்தல் ஆகிய மூன்றும் ஒரு மொழி தன்னகத்தே பெற்றிருக்க வேண்டும்; ஒழுங்காக எண்ண எண்ணியவற்றைத் திறம்படச் சொல்ல, சொன்னவற்றை செயல் மூலம் எடுத்துக்காட்ட மூன்றுவகையாகத் தமிழ் வளர்த்தனர் நம்முன்னோர்;— எண்ணங்களைச் செப்டனி உபயோகித்த தமிழை இயல் தமிழ் என்றோம், எண்ணத்தைப் பதிய வைக்க இசையோடு எடுத்துக்கூற வேண்டாமா? அதைத்தான் இசைத் தமிழ் என்றோம்; இசையோடு வாழ்க்கையின் சுக துக்கங்களை நடித்துக் காட்டுவதுதான் நாடகத் தமிழ் என்று கூறினோம்.

தொல்காப்பியம்

தொல்காப்பியனார் இலக்கணம் அமைத்தபோது இயல் இசைநாடகத்தோடு பொருள் இலக்கணமும் கூறியுள்ளார். "மனத்தின் எண்ணி, மாசறத்தெரிந்துகொண்டு, இனத்தில் சேர்ந்து உணர்த்தல் வேண்டும்" என்று எளிமையுடன் தொல்காப்பியனார் கூறினர். இவ்வளவு எளிய பகுதிகள் உள்ள தொல்காப்பியத்தைப் பற்றித்தவறாக மிகக் கடின நூல் என்று கூறுகின்றனர்.

உலகத்தைத் தமிழன் எவ்வாறு ஆராய்ந்தான் என்பது கேள்வி; இன்று எதாவது புதிய பொருள் வந்தால் 2000 ஆண்டுகளுக்கு முன்பே வந்துள்ளனவென்று தமிழ்ப் புலவர்கள் கூறுகின்றனர் என்று கருதலாம்; நாங்கள் அதற்காகக் கூறவில்லை; இது புதிய தொன்றன்று நம் முன்னோர்கள் அறிந்திருந்தார்கள் என்பதாகும்.

எந்தக் கலைகளையும் நற்றமிழில் ஆக்க முடியும்; அதற்குத் தேவையான சொற்கள் உண்டு இதனால் தாழ்மை நிலையைத் தகர்த்தெறிந்துவிடலாம் அரசியல் ஆக்கம் தமிழர் பெற வேண்டுமானால் தமிழ் முதல் இடம் பெறவேண்டும்

ஆழ்கடலில் போந்த பெருநிலத்தைப் பற்றியும் பொருட்படுத்தாது தமிழ் ஓம்பிழைக்கும் நாம் தளர்ச்சியடையமாட்டோம். தமிழ்ப் புலவர்களுக்குத்தான் தமிழ் சொந்தம் என்று நினைப்பதைப் போன்ற தீதானது வேறொன்றுமில்லை. "இருந்தமிழே உனக்காக இருந்தேன்" என்று ஒரு புலவர் கூறியதுபோல், தமிழில் ஆராய்ச்சி செய்யுங்கள், புதுப் புது கருத்துகள் பரப்புங்கள். என்று கூறி வாழ்க தமிழ் என்று வாழ்த்தி என் உரை முடித்துக்கொள்கிறேன்.

ஔவை துரைசாமி

ஔவைதுரைசாமிப்பிள்ளை இலக்கணம் இலக்கியம் என்பதுபற்றிக் கூறியதாவது "இலக்கியம் இலக்கணம் பழைய நூல்களில் காணப்படாத சொற்கள்; பிற்கால நூல்களில் காணப்படுகின்றன இலக்கணம் என்பது வடமொழியானால் பொருள் ஒன்றாகத்தானே இருக்கவேண்டும். இலக்கணத்தை அவர்கள் வியாகரணம் என்று கூறுவர்; வடமொழியில் காணப்படும் இலக்கணம் என்ற சொல் வேறு தமிழில் காணப்படும் இலக்கணம் என்பதின் பொருள்வேறு தொல்காப்பியனாரே இலக்கணம் என்ற வார்த்தையை உபயோகித்துள்ளார்; தமிழில் 'வார்' என்றொரு சொல் உள்ளது; அதன் பொருள் [illegible] சண்டை என்பது. இதே வார்த்தை ஆங்கிலத்தில் போரைக் குறிக்கும், ஆகையால் தமிழிலிருந்துவந்ததென்று கூறுவது அறிவுடைமையாகுமா? அதேபோல்தான் இலக்கணம் என்னும் வார்த்தையும்; ஒருவர் கூறுவதை வைத்துக்கொண்டு நாம் ஒன்றும் செய்துவிட முடியாது. ஒப்புநோக்கவேண்டும். பல மொழிகளைப் படித்துப் பார்க்கவேண்டும்"

"தமிழ்நாடு ஒருகாலத்தில் தமிழனிடம்இருந்தது. ஆனால் உண்மைத் தமிழன் செத்தே போனான் என்று கருதினோம். தமிழ்ப் புலவர்களாகிய நாங்கள் அதைப் பொய்யாக்கிவிட்டது இங்குள்ள மக்கள் வெள்ளம்.

தமிழ்முதல்மொழியாக வேண்டும்

"மற்றும் அகத்தியரால்மட்டும்தான் தமிழ் வளர்ந்தது என்று புராணங்கள் கூறுகின்றனவென்று. இல்லை; அகத்தியனுக்கு முன்பே தமிழ் வளம் பெற்றிருந்தது என்பதையும் அதே புராணங்கள் கூறுகின்றன. தமிழ்நாட்டுக்குச் செல்லும்படிச் சிவன் அகத்தியனைப் பணித்தபோது தமிழ்நாட்டின் சிறப்பை அறிந்திருந்த அகத்தியன் நடுநடுங்கிவிட்டானாம்! தமிழ் மக்கள் ஒண்பொருள் பற்றிப் பல கேள்விகள் கேட்டுத் திகைக்க அடிப்பார்களே என்று பயந்துவிட்டார்.

கோவை ஒரு சிறந்த நகரம். அது அறிஞர்களைப் பெற்ற நாடு ஒருவாழை ஒருகுலைதான் தள்ளுமென்பது நாம் கண்டது. பல குலைகள் ஒரு வாழை தருமென்று கண்டுபிடித்த பேரறிஞர் தமிழர். ஜி. டி. நாயுடு வாழும் நகர் கோவை. இதைப்பற்றி 10 வரி எழுதவில்லை எந்தப் பத்திரிகையும். தோழர் ஜி டி. நாயுடுவின் கண்டுபிடிப்பை எவனும் இன்று சிறப்பிக்கவில்லை. தோழர் ஆர். கெ.எஸ். வகித்து வந்த நிதிமந்திரி இடம் என்ன பாடுபடுகிறது. ஆகையால் தமிழ்நாடு அறிஞருக்கு என்றும் குறைந்ததில்லை.

தமிழ்மொழி கட்டாய பாடமாக்கப்படவில்லையென்பதை தமிழ்நாடு கேட்டுக்கொண்டிருக்கிறதென்றால் அதன் கேட்டை என்னே என்பது. மொழிவளர்ச்சிவேண்டும்கண் திறக்கப்படவேண்டும். முத்தமிழ் வளர்ச்சிமாநாட்டின்சார்பாக நாங்கள் கூறுவது தமிழ் மக்கள் தமிழராக வாழவிரும்பினால். தமிழ் பள்ளிகளில் தமிழ் முதல் பாடமாக வைக்கப்படவேண்டும். மதிப்புமிகுதியானவற்றையே மக்கள் நாடிச் செல்வார்கள். அதேபோன்றுதான் ஒருதுறையில் மக்கள் பயிற்சிபெறவேண்டுமானால் அத்துறைக்காக ஊதியம் உயர்த்தப்படவேண்டும். இன்று பல இளைஞர்கள் தோன்றிவிட்டார்கள். இந் முறையில் நாடு நல்ல வழிக்கு வந்து கொண்டிருக்கிறது. இன்று வந்துள்ள புதுவெள்ளம் தமிழ்ப்பண்பாட்டை—

(4-ம் பக்கம் பார்க்க)

பொல்லாத இந்தித் தீ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்க்கவேண்டும். பிற்போக்கணைகளைத் தகர்க்கவேண்டும்.

மு. கருணாநிதி

தோழர் மு. கருணாநிதி ஆற்றிய சொற்பொழிவாவது:— இலக்கணம் தமிழா ஆரியமா என்ற பிரச்சினையை எடுத்துக்கொண்டு, தமிழ் சீரழிவைக் கவனிக்காமல் இருக்கிறார்களே என்று புண்பட்டேன். நாட்டில் இன்று தமிழை ஒழிக்க ஒரு வகுப்பு கங்கணம் கட்டிக்கொண்டிருக்க, இதற்கு அரசியலார் உடன்பட நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. ரோம் நகர பற்றியெரியும் போது நீரோ பிடில் வாசித்தான் என்று கூறுவதுபோல இந்தி நெருப்பு பரவும் நேரத்தில், புலவர்கள் இவ்வாறு சர்ச்சைகளில் ஈடுபடுவது சரியாகாது.

திராவிட முன்னேற்ற கழகம்தான் தமிழைவளர்த்து வந்திருக்கிறது. தமிழ் தாயின் அழகை, எழிலைப்பார்! தமிழ்த் தாய்மீது பாய்ச்சப்பட்ட கதிகளைப்பார் என்று காட்டியது தி. மு. கழகம். இந்நாட்டில் தமிழ் உணர்ச்சிபரவக்காரணம் 1939ல் ராஜகோபாலாசாரியாரால் இந்தி புகுத்தப்பட்டதால்தான். பெரியார் பெல்லாரி சிறைக்கு அனுப்பப்பட்டார்; தளபதி அண்ணா சிறையில்அடைக்கப்பட்டார். தாலமுத்து நடராஜன் உயிர் குடிக்கப்பட்டது. அந்த நேரத்தில் எங்கிருந்தார்கள் இந்தப் புலவர்கள் என்று தெரியவில்லை. நாங்கள் கூறுகிறோம், ஔவையார் எழுதினார், பாரதியார் எழுதினார் என்று கூறுவதற்கு இன்று நேரம் இல்லை.

ரயில்வே பலகைகளில் எல்லாம் இந்தி; யார் எதிர்த்துக் கூறினார்கள் இதுவரையில் தி. மு. க. வைத் தவிர" என்று கூறி முடித்தார்.

அண்ணல்தங்கோ

தோழர் அண்ணல் தங்கோ பேசும்போது தமிழ் இசைக்குப் பயன்படாது, அறிவு வழிக்குப் பயன்படாது, அரசியலுக்குப் பயன்படாதுஎன்று தமிழ்ப் பகைவர்கள் கூறுகிறார்களென்று கூறினார். திராவிடம் என்ற சொல் தனக்கு பிடிக்கவில்லை யென்று அவர் குறிப்பிட்டார்.

க. அன்பழகன்

தோழர் அன்பழகன் பேசியதாவது: தி. மு. க சார்பில் நடக்கும் இந்த முத்தமிழ் நாட்டில் பலதிறத்தினரும் கலந்து கொண்டிருக்கிறார்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையைப்பற்றித்தான் திராவிட இனப்பெயரை கைக்கொண்டுள்ளோமே தவிர தமிழை உதாசினம் செய்ய வேண்டுமென்பது அல்ல. பெயரை நானும் என் நண்பர் இரா. நெடுஞ்செழியனும் புராணப்பெயர் வைத்திருந்தால்பிற்காலசமுதாயம்கெடுமேஎன்று தான் பெயர் மாற்றிக்கொண்டோம். [illegible] கதையைப் படித்து அதன் பித்தலாட்டங்களை எடுத்துக்காட்ட வடமொழி படிக்கக்கூடாதென்று கூறுவது சரியல்ல. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஏற்றுக்கொண்ட சொல் திராவிடம் அறிஞர் அண்ணா ஏற்றுக்கொண்ட சொல், மக்களால் கைக்கொள்ளப் பட்டுள்ளது, அதை ஏன் வெறுக்கிறார் என்பதுதான் விசித்திரமாக இருக்கிறது. தமிழின் மானத்தைக் காக்க, மீட்கப் படைதிரட்ட வேண்டுமானால் திராவிட இனத்தைச்சேர்ந்ததாகத்தான் இருக்கும் அப்படை. தமிழ் உணர்ச்சிபெருக்கத்தான் நாங்கள் கூட்டியுள்ளோம். மாநாடு: வேறுயாரும் கூட்ட முன்வரவில்லை. நெருக்கடியான நிலையில் தமிழில் மறுமலர்ச்சி தோற்றுவித்துள்ளோம். கருத்தில் காட்சியில் மறுமலர்ச்சி தோற்றுவித்திருக்கிறோம். ஆனால் படைத்திறனுக்குத் தமிழர் தயாரிக்கப்படவில்லை. அதைத்தான் செய்துவருகிறோம்.

தமிழ் வளர்ச்சி மாநாட்டில் தமிழ் வளர்ச்சிக்காகத்தான் பேசி இருக்கிறார்கள். அதற்காக மகிழ்ச்சி, ஆனால் புராணத்தைக் கண்டிக்கப் பயப்படுகிறார்கள். இந்தியை எதிர்த்துத் தீர்மானம் போட்டிருக்கிறார்களே தவிர, செயலளவில் எதையும் செய்யப்போவதாக ஆர். கே. ஷண்முகம் கூறவில்லை. அவிநாசியாரும் [illegible].

நாம் ஒரு கூட்டமாம்!

ஒரு மத்திய சர்க்கார் மந்திரியாக இருந்தவர் பேசினார். ரத்தின சபாபதி முதலியார் பேசினார், ஆனால் முதல் மந்திரி தகுந்த பதில் தராமல் தமிழை முதல் மொழியாகக் கொண்டுவர முயற்சிக்கிறேன் என்று அவரால் வேறு அதிகம் கூறமுடியாது; கூறுபவராக இருந்தால் பதவிக்கு வந்திருக்க முடியாதே! மற்றும் சமஸ்கிருதம் படிப்பதால் தமிழ் வளரும் என்று கூறியுள்ளார் ஆர். கே. எஸ். சமஸ்கிருதம் படித்ததால் பஞ்சாங்கம் வைத்தியம் வளர்ந்திருக்கிறது; மூடப் பழக்க வழக்கங்கள் முதிர்ந்துள்ளன. தமிழ் மக்களை அடிமைப்படுத்தியுள்ளது; அப்படிப்பட்ட சமஸ்கிருதத்தை அவர் படிக்கவேண்டுமென்று கூறினார். அதோடு மல்ல திராவிடம் என்ற சொல் தனக்குப் பிடிக்கவில்லையென்றும் வேறு. இந்தி கட்டாயபாடமாக வைக்கப்பட்டபோது ஒரு கூட்டத்தினர் எதிர்த்தனர் என்று கூறியுள்ளார். நாம் ஒரு கூட்டமாம்! ஆம், அப்பொழுது அவர் நம்முடன் இருந்தார்; இப்பொழுது வெறும் மனிதர் ஆகிவிட்டார். அதனால்தான் நம்மை ஒரு கூட்டம் என்று கூறுகிறார்.

மறுமலர்ச்சிக்கு உணர்ச்சி வேண்டும்

மூன்று மொழிகளைக்கட்டாய பாடமாகப் படிக்க வேண்டுமென்ற [illegible] புகுத்தப்பட்டது அதுமின்றி தமிழுக்குள்ள [illegible] வேதமொழியைப் படிக்கலாமென்று தோழர் மாதவமேனன் புது உத்திரவு போட்டிருக்கிறார். தமிழ் இருக்குமிடத்தில் செத்த மொழியான சமஸ்கிருதத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறார் மாதவமேனன், ஆர். கே. எஸ். என்ன மாதவமேனனுக்குக் குறைந்தவரா, [illegible] இருந்த கண்டனத் தீர்மானத்தை கட்டிக் நிறைவேற்றி விட்டார்களே தவிர ஆக்கவேலை உடனே செய்ய முன்வரவில்லை. இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் செய்து வருகிறோம். கட்சி வேறுபாடற்று போராட்டத்தில் புகுந்தாக வேண்டும்; தமிழாசிரியர் அத்தனை பேரும் எனக்குத் தெரியும். மேடையில் பேச அவர்களுக்கு அச்சம்; அவர்கள் முன்னுக்கு வந்து தமிழ் மொழியை நல்ல முறையில் மக்கள் உள்ளத்தில், இளைஞர் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும். வேலை போய்விடும் என்று பயப்பட வேண்டாம். என்னையும் அனுப்பிவிட்டு மாதவமேனன் ஒருவரே வகுப்பு நடத்தி விடுவாரோ? உணர்ச்சியை வளர்த்துவிட்டால் மறுமலர்ச்சி ஏற்படும்; தமிழ்ப் பகைவரை இந்தி எருமை மேயும் நிலைமைதான்'' என்று கூறி முடித்தார்.

விஞ்ஞானிகளிடம் அகப்பட்டு வேதனைப்படும் மேகங்கள்

ரேடியோ-மேகனடிக் அலைகள் மூலம் மழையைத் தடுக்க முயற்சி

நியூயார்க், மே 30— செயற்கை மழை பெய்விக்க செய்யப்பட்ட முயற்சியை எதிர்த்து மழை பெய்யாமல் மேகங்கள் கலைந்துபோக செய்யப்பட்ட முயற்சி குறித்து தகவல் இங்கு கிடைத்திருக்கிறது

ஹார்வர்ட் புரபஸர் டாக்டர் ஹோவெல் விமானத்தில் சென்று உலர்ந்த ஐஸ்கட்டிகளை மேகங்களில் தூவுவது மூலம் மழைபெய்விக்க முயன்றார். இவர் மழை பெய்யும்படி செய்தால் இவருக்கு ஒருநாளைக்கு 35 பவுன் கிடைக்குமாம்.

நியூஜெர்ஸியில் உள்ள ஒரு பொழுதுபோக்கு கேளிக்கை கம்பெனியார் மழை வந்தால் தங்கள் வியாபாரம் கெட்டுவிடும் என்று கருதி ஹோவெல்லிடம் இம்முயற்சியில் ஈடுபடாமலிருந்தால் இரட்டிப்பு தொகை தருவதாக கூறினர். ஆனால் அதற்கு அவர் மறுத்துவிட்டார்

ஆகவே இம்முயற்சிக்கு எதிர் முயறசி செய்து மழை வராமல் தடுப்பவர்களின் உதவியை அக்கம்பெனியார் நாடினர். ஒரு தினத்திற்கு 175 பவுன் தருவதாகச் சொல்லி டாக்டர் ஸைகல், தோழர் எட்வர்ட் ட்வார்ட்ஸ் என்பவர்களை ஏற்படுத்தப்பட்டனர்.

இவர்களிருவரும் ரேடியோ, எலெக்டிரோ மாக்னெடிக் அலைகள் மூலம் மழை தரும். மேகங்கள் கலையும்படி செய்துவிட்டனராம்.

—குளோப்

ஸ்மட்சுக்கு உடல் நலமில்லை

கேப்டவுன், மே 30— ஸ்மட்ஸ் தேக அசௌக்கியமாக இருக்கும் செய்தி தென்னாப்பிரிக்க பத்திரிகைகளில் எல்லாம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் தென்னாப்பிரிக்க (பிராட்காஸ்டிங் கார்ப்பொரேஷன்) அவருடைய தேக அசௌக்கியம் பற்றி எதுவுமே அறிவிக்கவில்லை.

ஸ்மட்ஸ் உடல் வலி [illegible] இருப்பதாக செய்திகள் கூறுகின்றன. அவருக்கு மின்சார சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறதாம்.

குதிரைப் பந்தயத்தில் மின்சார குதிரை!

நியூயார்க், மே 30— தன் குதிரை பந்தயத்தில் முதலில் வர [illegible] ஒரு பாட்டரியை வைத்துக்கொண்டு மின்சார சக்தியை குதிரை உடலில் பாய்ச்சி ஷாக் ஏற்படும்படி செய்ததற்காக [illegible] ஜார்ஜ் அட்கின்ஸன் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார். இக்குதிரை பந்தயத்தில் 6-வதாக வந்ததாம்.

—குளோப்.

இந்தியாவுக்கு ஆஸ்திரேலியகோதுமை

விலை குறைக்கப்படலாம்

ஸிட்னி, மே 30— இந்தியாவுக்கு ஆஸ்திரேலியாவின் கோதுமை நியாயமான விலைக்கு கிடைக்கலாம் என்ற நம்பிக்கைக்கு இப்பொழுது இடமேற்பட்டிருக்கிறது.

இவ்விஷயமாக ஆஸ்திரேலிய வர்த்தக மந்திரி மக்கீவனை இந்தியாவின் பிரதிநிதி தோழர் ஏ. ராமஸ்வாமி முதலியார் சந்தித்துப் பேசியது ஞாபகமிருக்கலாம்.

இது விஷயமாக ஆஸ்திரேலிய கோதுமை போர்டு தலைவரை ஆஸ்திரேலியாவிலுள்ள இந்திய ஹை கமிஷனர் சந்தித்துப் பேசுவார்.

க்ஷய நோய்க்குப் புது மருந்து

லண்டன், மே 30— மிகவும் சக்தி வாய்ந்த மருந்து என்று கூறப்பட்ட ஏ. சி. டி. எச்: ஐ. விட இன்னும் அதிக சக்தி வாய்ந்ததும் மிகவும் இலகுவாக ரஸாயன முறையில் தயாரிக்கக் கூடியதாகவும் உள்ள ஒரு புது மருந்தை லண்டன் 'பயோ கெமிஸ்ட்' டாக்டர் காலின்மாரிஸ் தயாரித்திருக்கிறார்.

இம் மருந்து மூன்றே நாட்களில் க்ஷயத்தை குணப்படுத்தக்கூடியதாம். நிமோனியா, நுரை ஈரலில் உள்ள தொல்லைகள் இவைகளை எல்லாம் இது குணப்படுத்தக்கூடியதாம். இது இன்னும் ஆராய்ச்சிக் கட்டத்திலேயேதான் இருக்கிறது.

சர்வதேச நிலைமை சாதகமாயிருக்கிறது

லண்டன், மே 30— மலேயாவில் கைப்பற்றப்பட்ட கம்யூனிஸ்ட் தஸ்தாவேஜிகளில் சர்வதேச நிலைமை மிகவும் சாதகமாக இருப்பதாகவும் ஆனால் போராட்டம் நீண்டகாலம் நீடிக்கும்படியாக இருக்கும் என்றும் காணப்படுவதாகக் கூறப்படுகிறது

இனி நடப்பவை

மறுமலர்ச்சிசொற்பயிற்சிமன்றம் சைதாப்பேட்டை: இம்மன்றத்தின் சொற்பயிற்சிக்கூட்டம் 2—6—0 மாலை 6 மணிக்கு சடையப்ப முதலித் தெருவிலுள்ள 2வது எண்ணுள்ள இல்லத்தின் மேன்மாடியில் நடைபெறும்.

* * *

திருப்பூர்:— 3—6—50 , சனிக்கிழமை இரவு 7-30 மணிக்கு திருப்பூர் குமரன் வாசகசாலை கட்டிடத்தில், 'மொழிவழி மாகாணம் அமைத்தல்'' என்று பொருள் பற்றி பலர் பேசுவர்.

காமன்வெல்த் வர்த்தக மாநாடு

இந்தியா விரும்பாதாம்.

லண்டன், மே 30— பிரிட்டனின் உற்பத்தியாளர் தேசிய யூனியன் காமன்வெல்த் வர்த்தக மாநாட்டைக்கூட்ட சர்க்கார் சம்மதத்தைப் பெறவிருந்தனர். ஆனால் இதற்கு இந்தியாவிடமிருந்து ஆட்சேபம் வரும் என்று தெரிவதால் இதை வற்புறுத்த அந்த யூனியன் உத்தேசிக்கவில்லை என்று தெரிகிறது.

அந்த யூனியனின் காரியதரிசி குளோப் நிருபரிடம் கூறுகையில் இந்த மாநாட்டு யோசனைக்கு ஆட்லி சம்மதிப்பார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை என்றும் ஆகவே காமன்வெல்த் கைத்தொழில் முதலாளிகள் மாநாட்டைக் கூட்டலாமா என்று ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் கூறினர்.

இப்பொழுதுள்ள நிலைமையில் இந்தியா கனடா போன்ற நாடுகள் இம்மாநாட்டில் முக்கிய பங்கு எடுக்காது என்றும் ஆகவே ஆட்லி இதற்கு சம்மதிக்கமாட்டார் என்றும் அவர் கூறினர்.

மரத்திலிருந்து பட்டு, கம்பளம் தயாரிக்கலாம்

ஆஸ்லோ, மே 30— நார்வேயிலுள்ள ஒரு சாதாரண மரத்திலிருந்து பட்டு, கம்பளி நூல்கள் தயாரிக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான தொழிற்சாலை ஒன்றும் ஏற்படுத்தப் படவிருக்கிறதாம்.

இன வட்டார மசோதாவை எதிர்க்க தெ. ஆ. இந்தியர் ஐக்ய முன்னணி

—(0)—

ஆட்சியாளரைக் கண்டித்து கடையடைப்பு செய்ய சுதேசிகள் யோசனை

டர்பன், மே 30— மலான் சர்க்கார் பிடிவாதமாக நிறைவேற்றவிருக்கும் இனமண்டல மசோதாவுக்கு இந்தியர்கள், ஆப்பிரிக்கர்கள் எதிர்ப்பு வலுப்பட்டு வருகிறது.

தென்னாப்பிரிக்க இந்தியர் வலதுசாரிக் கட்சியான இந்தியர் ஸ்தாபனமும், இடதுசாரி கட்சியான இந்திய காங்கிர காங்கிரஸும் இனவட்டார மசோதாவை எதிர்ப்பதில் ஒன்று சேர்ந்து ஐக்ய முன்னணி ஏற்படுத்திக்கொள்ளலாம் எனத் தெரிகிறது

மலான் சர்க்காரைக் கண்டித்து ஆப்பிரிக்கர்கள் ஒரு நாள் கடையடைப்பு நடத்த உத்தேசித்திருப்பதாகவும் தெரிகிறது.

நார்வேயில் ரூஸ்வெல்டுக்கு சிலை

ஆஸ்லோ, மே 30— நார்வே தலைநகரான ஆஸ்லோவில் ரூஸ்வெல்டுக்கு சிலை வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைதிறந்துவைப்பதற்காக தோழியர் ரூஸ்வெல்ட் ஜூன் 4-ந் தேதி இங்கு வந்து சேருகிறார்.

டொரொன்டோ, மே 30— கியூபெக் மாகாணத்தில் ஏராளமாக செம்பு உலோகம் அகப்பட்டிருக்கிறது.

Printed & Published by
T. M. Parthasarathy at the
Mercantile Press, 2/45, Muthu
mari Chetty St, Madras-1.